உ

முருகவேள் துணை.

பார்ஸி அதிநூதன இந்துஸ்தான்
வர்னமெட்டுகளடங்கிய
ஆனந்தமோகன

# வள்ளியம்மன்

## சரித்திரம்

இஃது
மதுரைமாநகரம்
மகா-௱-௱-ஸ்ரீ
வித்வான் சடகோபதாஸர் அவர்கள்
குமாரர்
டிராமா உபாத்தியாயர்
இராஜவடிவேல்தாஸர்
இயற்றியது.

மதுரை புக்ஷாப்
பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு
மு. கிருஷ்ணபிள்ளை அவர்கள்
வெளியிட்டது.

ரிஜிஸ்டர்காப்பிரைட்.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்
1924

புதியபாடல்கள்! ...ளியக்கீதங்க...

நமது நண்பர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த
பழனிக்ஷேத்ரம் முத்தமிழ்ச்சக்ரவர்த்தி
ஸ்ரீமது மாமபழக் கவிச்சிங்க நாவலரவர்கள்
கனிஷ்டசகோதரர் சுப்பிரமணிய ஆச்சாரியாரவர்கள்
குமாரர் மகா-௱-௱-ஸ்ரீ
எம். ஆர். எஸ். வேலுச்சாமிகவிராயரவர்களியற்றிய
தண்டபாணி தெய்வ ரஞ்சிதமென்னுஞ்

# பக்திரசக்கீர்த்தனம்

| | |
|---|---|
| முதற்பாகம் | 0—5—0 |
| 2—ம்பாகம் | 0—5—0 |

---

உலகப்பிரசித்திபெற்ற ரெட்டிநகர் வித்வான்
மகா-௱-௱-ஸ்ரீ
இராமசாமிக்கவிராயரவர்களியற்றிய

# புதிய பக்திரசக் கீர்த்தனம்.

இதன் விலை அணா-4

---

இத்தமிழ்தேசவாசிகளுக்கு
இஃது
ஓர் கற்பகதருவென்னும்

# சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி

பூலோகத்தில் மானிடராக அவதரித்த ஆடவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் அத்யாவசியமுள்ளது. யாவரும் உணரும்பொருட்டு தமிழில் எளியநடையாக அச்சிட்டு வெளிவந்திருக்கிறது.

இதன் விலை அணா-6

---

புதிது புதிது புதிது

...டிராமாஉபாத்தியாயர்
U. P. கா... சிபிள்ளை அவர்கள்
...யற்றிய

# விநோத பரமானந்தக் கீர்த்தனம்

இதன் விலை அணா-5

97943

மு. கிருஷ்ணபிள்ளை,
பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

முருகவேள் துணை.

பார்ஸி

## ஆனந்த மோகன

# வள்ளியம்மன் சரித்திரம்.

### விநாயகர் துதி.

வெண்பா

சத்திக்கணபதியே சாமியெந்நாளுமினி
பக்திக்கருள்வேலன் பரிவாகி—சித்திக்க
தாமதினேகார்க்கும் வள்ளி சுந்தரக்கல்யாணம்
நேயமொடு பாட நீகார்.

### பாடல்

தொலிலோ என்ற மெட்டு.

பல்லவி

திருவேவளர் மூஷிகவாகன
சித்திவிநாயகனே
சிவன்மகனே (தி)

அநுபல்லவி

வருவாயென்னிருதயமகிழவே
வல்லபைகணபதியே
மாநிதியே (தி)

சரணம்

தணிகாசலக் குமாரவேள்வள்ளியைத்
தனதாகமணம்புரிந்த
சரிதைதெசாந்தம்

இனிதேபாடவரமருளி துதி
இணையில்லாக்கதிரொளியே
இருள்வெளியே (இ)

மதுராபுரி ராஜவடிவேல்தமிழ்
வழங்கிடக்கருணைசெய்வாய்
வறுமைகொய்வாய்

கெதியாய்உம்பர்போற்றிடுமுதல்வனே
கேசவன்மருமகனே
கெஜமுகனே. (இ)

---

## சரஸ்வதி துதி.

### விருத்தம்

சதுர்மறை பரவுகின்ற சரஸ்வதிதாயே உன்னை
பி துதிதுதியேசெய்தேன் எந்தனாவுதன்னில்
உதயமேசெய்வாயம்மாவுகந்துமேவள்ளியம்மன்
கதையதைப்பாடலுற்றேன் சார்ந்தருளிவிதகூர்ந்தே.

### பாடல்

சுஜனஜீவனா என்ற மெட்டு.

பல்லவி

சுருதிகாரணி தாயே சுகிர்தபூரணி

அநுபல்லவி

தருணம்வாணியே சங்கத்தமிழ்கல்யாணியே
சரணந்தனை யருளுந்தனைசதா துதிசெய்தேன்தாயே (சு)

சரணம்

ஞானபண்டிதன் கானவள்ளியை நன்மணஞ்செய்த
நாடிச்சரிதை பாடநித்ய நலமருளினி
மாநிலமீது ராஜ் வடிவேல்போற்றிடும்
மாதா நான்முக வேதா மகிழும் வரதசரஸ்வதி (தா)

## 1-வது சீன்.

சிற்றூர்

## நம்பிராஜன் தர்பார்

பாட்டல்

சாமிவிவேகானந்தா என்ற மெட்டு.

பல்லவி

தேவா முருகா குகா
சண்முகநாதா (தே)

அநுபல்லவி

சிந்தையில்நிறைந்தயோகா சந்ததம்பணிந்தேன்வாகா (தே)

சரணம்

வாவாமயிலின்மீதே சேவாதடையில்லாதே
வரமிப்போதே
வஞ்சிதெய்வானைபாகா சஞ்சலந்தீர்விசாகா
பஞ்சசையைக்கார்தியாகா மாவிவேகா
வருமைதீரு கருணைகூரு
வானோர்பணியும் ஞானகுருவே (தே)
கண்ணன்மருமகனே புண்ணியமாசகனே
கங்கைமகனே
கந்தனேநீயேகெதி யெந்தனையாள்வாய்நிதி
அந்தரர்சேனபதி செந்தமிழி
கடிதோராஜவடிவேல் நேசக்
கடவுள்நீயே யிடர்தீர்ப்பாயே (தே)

---

## நம்பிராஜன் புதல்வர்கள் வருகிறது

ஆனந்தமானந்தமானந்தமே என்றமெட்டு.

பல்லவி

வந்தனம் வந்தனம் வந்தனமே—எந்தன்
வந்தனம் வந்தனம் வந்தனமே

அநுபல்லவி

தந்தையே மிகமகிழ்ந்தே
இந்தவேளையேயுகந்தே (ஸ)

சரணம்

மாசில்லாமலே சிற்றாரசாட்சி
வையகமெங்கிலுமோங்கிட மாட்சி
நேசமாய்ச்செங்கோல்நெறியுள்ள காட்சி
நீதிமகிபனே நீதில்லாதிப்போது (வ)

வசனம்—பிதாவே மைந்தர்கள் வந்தனஞ்செய்கின்றோம். எங்களை யழைத்த காரணம் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கின்றோம்.

---

## தர்க்கம்

மரகதசித்ரமயூரவாகா என்ற மெட்டு.

கண்ணிகள்

நம் — மைந்தர்களே நீங்களதிவிரைவாக
வள்ளியையழைத்திங்கு வருவீரன்பாக—தினை
வனமதிலே பக்ஷிகள்
அணுகாமற் காக்கவேணும்
மகிழ்ந்து மன துகந்து

வசனம்—புதல்வர்களே தினைக்கதிர்களை பக்ஷிகளெல்லாம் வந்து அழிக்கிறபடியினாலே அதிசீக்கிரமாக நமது புத்திரியாகிய வள்ளியை அழைத்து வருவீர்கள்.

மைந் — தந்தையே வள்ளியை அழைத்தினிதாக
தருணமே வருகிறோம் அகமகிழ்வாக திருத்
தணிகாசலக் குமரன்
அனுகூலஞ் செய்திடவே
சார்ந்து இங்கு நேர்ந்து

வசனம்—பிதாவே இதோ அதிசீக்கிரமாக எங்கள் தங்கையாகிய வள்ளிநாயகியை அழைத்து வருகின்றோம்.

## 2-வது சீன்.

## வள்ளியம்மன் மாளிகை.

### வள்ளியின் பாடல்

நானம்புந்தேவதையே என்ற மெட்டு.

பல்லவி

ஞானசண்முக குகனே — தணிகாசல
நாயகனே யெந்தன் தாயகனே

அநுபல்லவி

தீனரக்ஷகமுதல்வா மீனலோசனிபுதல்வா (ஞா)

சரணம்

வானவர் சேனுபதியே வந்தருள்தயாநிதியே
யானைமுகன்சோதரனே அற்புத நிராதரனே
ஆனந்த சுகானந்த பேரானந்தமாம் பரப்ரம்ம (ஞா)

ராஜவடிவேல் சகாயா நங்கை தெய்வயானை நேயா
பூஜியாகப் பணிந்தேன் புங்கவா சதாநினைந்தேன்
போதனே வினோதனே அத்வீதனே தற்பரயோக (ஞா)

### நம்பிராஜன் புதல்வர்கள் பாடல்.

வேலா நீகெதி என்ற மெட்டு.

பல்லவி

வள்ளிநாயகியே தங்கை வள்ளிநாயகியே

அநுபல்லவி

வருவாய் தந்தையும் வரவே சொன்னதால் (வ)

சரணம்

புள்ளிமயில்மீதேறுநாதன் பொன்னடிபணிந்தத்வீதம்
உள்ளமீதுணர்ந்துபோதம் யோகஞானமேகைக்கொள்வாய் (வ)

தாமசஞ்செய்யாமல்நீயே தந்தைமுன்புவருவாயே
ஆமமழாய்மகிழ்ந்துவாயே நீதுகளண்டாதிப்போது (வ)

வசனம்—சகோதரியாகிய வள்ளிநாயகியே நமது பிதாவானவர் உன்னை அழைத்துவரும்படி ஆக்ஞாபித்திருக்கிறபடியால் வருவாய் அம்மா.

## வள்ளிக்கும் அண்ணன்மார்களுக்கும்

## தர்க்கம்

சந்தனந்திமிர்ந்திலங்கும் என்றமெட்டு.

கண்ணிகள்

வள் — தந்தையெந்தனையழைத்த விந்தையைஎடுத்துரைப்பீர்
சற்குண அண்ணமார்களே மகிழ்வாக
இந்தவேளையேயுகந்து வந்தனமிகவே தந்தேன்
இப்போதுமிகவேண்டினேன் ததிநானே

வசனம்—அண்ணன்மார்களே பிதாவானவர் என்னையழைத்த விஷயம் கிருபை கூர்ந்து பகர வேணும்.

பாட்டல்

அண் — தங்கையே பிதாவின் முன்பு பொங்கமுடனேநீவந்து
தன்மையாயறிந்துகொள்வாய் ததிநேராய்
எங்களுக்கினிதேயந்தச் சங்கதிபகரவில்லை
இக்ஷணம்வருவாயம்மா பகர்ந்தோமே

வசனம்—சகோதரியேபிதாவானவர் அதின்விபரத்தைஎங்களுக்கு தெரிவிக்கவில்லை, நீயதிசீக்கிரமாகப் பிதாவிடம் வந்து தெரிந்து கொள்ளுவாயம்மா.

---

## 3-வது சீன்

## நம்பிராஜன் தர்பார்

பாட்ல்

பரப்ரம்மவேலா என்றமெட்டு.

பல்லவி

திருத்தணிகாசலா திவ்யகோலாகலா

அநுபல்லவி

வருத்தமேதீர்த்தருள் மயின்மிசைவருகுகா (தி)

சரணம்

வாசவர் பணியும் பாதா மாதுதெய்வானைநாதா
ராஜவடிவேற்குதாரா நம்பியேபணிந்தேன் தீரா (தி)

## வள்ளிபிதாவைவணங்குதல்.

### சோதிசொரூபாநந்தா என்ற மெட்டு.

பல்லவி

பாதாரவிந்தம் கெதி
பணிந்தேனையாவே (பா)

அநுபல்லவி

பாரில்மேவிப்போற்றுந்திரா வீரசூரமாவொய்யாரா (பா)

சரணம்

நீதமாய்எனையழைத்த தேதுபிதாவேமெத்தப்ரியந்த
நெறிபிசகாதமெய்யா குறியொடுசொல்வீரையா
நேசமாய்த்தொண்டுசெய்வேன் நேர்ந்துய்வேன்
நிகரில்லாதவுயர்கிராத மகிபராணவிறைவயோனும் (பா)

வசனம்—பிதாவே புதல்வியாகிய வள்ளி வந்தனஞ்செய்கின்றேன். என்னையழைத்தவிஷயம்யாது கிருபைசெய்யவேணும்.

## தர்க்கம்

### சுயராஜியமதிக என்ற மெட்டு.

கண்ணிகள்

நம் — தினைவனமணுகியே காக்கவேணுமினியே
தெரிந்துகொள்வாயம்மா புதல்வியே

வள் — வனமதில் விலங்கினம் ஏகமாயிருக்குமே
மனதுகலங்கிடுதே பகர்வீரே

(தொகையரு)

நம் — வள்ளியே அண்ணன்மார் வந்துதவிசெய்குவார்
மனக்கவலை கொள்ளாதம்மா

வள் — உள்ளமும்பதறுதே பிதாவேஎன்செய்வேன்
ஓர்மையாகுவ தெய்விதமே

பாட்டல்

நம் — புதல்வியேமயங்காதே சேர்தார்கள்வந்துன்னை
புகழறப்பாதுகார்ப்பார் மயங்காதே

வள் — இதமுறத்தினைவனமே யானுங்கார்க்கின்றேன்
எனதுபிதாவேவிடை தரவேணும்

வள்—வச—பிதாவேசென்றுவருகின்றேன் உத்திரவாகவேணும்,

நம்—வச—அருமைப் புதல்வியாகிய வள்ளிநாயகி சென்று வருவாய் அம்மா.

4-வது சீன்.

## தினைவனம்

வள்ளியம்மன்பாட்டல்

கழுகுமலையதனிலுறை என்ற மெட்டு.

பல்லவி

தணிகமைலர்வளருங்குகா சரவணபவாசண்முகா

அநுபல்லவி

பணிசெய்தேன்ஞானதேசிகா பரமனருளியசுகா

(தொகையரு)

பன்னிருகையனே பச்சைமயில்வாகனா
பக்தர்கள் துதித்திடுமுருகா

நன்னயமாகவே ரக்ஷிப்பாயிது தகி
நரஹரிமருகன்முருகா (த)

சரணம்

தரணிராஜவடிவேல்நேயா சஞ்சலமகற்றுந்தூயா
வரமருளுஞ் சம்ப்ரதாயா
மகிமைவேலா பகைவர்காலா புகழ்விசாலா
சகுணசீலா (த

## ஆலோலம் பாடுதல்.

இராகம்-காம்போதி—தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் சோ

அன்னங்களே சொர்னங்களே அழகு குயில்காள் ஆலோலம்
வன்னமுள்ள கிள்ளைகளே மயில்களே ஆலோலம் (ஆ)

நாகணவாய்ப்புள்ளினங்காள் நல்லதொருதூக்கணங்காள்
வாகுள்ளதாராவே மாடப்புறாவினங்காள் (ஆ)

## கதாசாரம்

இவ்விதமாய் ஆலோலம் பாடி வள்ளி பரண்மீதிருந்து கவண்வீசி பக்ஷிகளை யோட்டிக்கொண்டிருக்கும்போது நாரதர் வருகிருர்.

## நாரதர் வருகிறது.

பாடல்

ராமபஜனகோரியா என்ற மெட்டு.

பல்லவி

ராமராம்ராமச்சந்திரா ராகவேந்திரா (ரா

அநுபல்லவி

பூமகள்மனோகரா புனிதவசீகரா
வாமனரூபவிநோதா மாமலர்ப்பாதா (ரா)

சரணம்

கோசலநாடுதாரா கோதண்டமேந்தும்வீரா
ராஜவடிவேல்சகாயா நம்பினேன்தாயா (ரா)

வசனம்—நாரதன் பிராப்தமாகினேன். நானே இன்று கயிலைக்குச் சென்று சாட்சாத்பார்வதிசமேதனாகிய சிவபெருமானைத் தெரிசித்து அவனுடையஅருள்பெற்று வைகுந்தத்துக்கேகி லட்சுமிகாந்தனாகிய நாராயணனைப்போற்றி அவனுடையஅனுக்கிரகம் பெற்று சத்தியலோகஞ்சென்று என்னுடையபிதாவாகியபிரம்மதேவனை வணங்கியாசிபெற்றுத் திரிலோகமுழுவதுஞ் சஞ்சரித்துவருங்கால் இந்தத்தினைவனத்தின்கண் குயிலிசையோடுங்கூடிய ஒருமாதானவள் ஆலோலம் பாடுகிறாள். சென்று பார்க்கின்றேன்.

பாடல்

கலிலோ என்ற மெட்டு.

பல்லவி

பரண்மீதிருந்தாலோலம்பாடிடும் பாவையோரூபவதி
படிபுகழும் (ப)

அநுபல்லவி

சுரர்மாதர்களிவளுக்கு இணையில்லை
சுகுணசற்குணவதியாள் துலங்குகின்ற (ப)

சரணம்

தனியேதினைவனமதைக்காக்கின்ற தையலையாரெனவே
சார்ந்தறிவேன்
புனிதரூபமாகவே தோணுகின்றாள்
பூவையர்க்கரசியிவள் புதுமையுள்ள (ப)

வசனம்— ஆகா! மகாரூபவதி இவளுக்குஇணை சொர்க்கமத்யபாதாளமென்கப்பட்ட மூன்றுலோகத்திலு மகிடையாது. இந்தத்தினைவனத்தின்கண் தனிமையாய்ப் பரண்மீதிருந்து கவண் வீசி ஆலோலம்பாடி பக்ஷிகளையோட்டிக்கொண்டிருக்கிறாள். இவள் இன்னாரென்று ஞானதிருஷ்டியாலறிகின்றேன்.

[ஞானதிருஷ்டியால்
நோக்குகின்றார்]

பாட்டல்

ஷிமெட்டு.

பண்டுசெய்தபுண்ணிய தவத்தினுல்
பரமனின்குமரனையே பதியதன்னில்
தொண்டர்தொழுஇவளே மணம்புரிவாள்
சொந்தமாய்ராஜவடிவேல் துதித்திடவே (ப)

வசனம்—இவளோ பூர்வஜெனனம் மகாவிஷ்ணுவினுடைய புத்திரி இவள்பூருவத்தில்முருகனைக்கோரி அறியதவஞ்செய்ய முருகன் பிரசன்னமாகி உனக்குயாதவரம்வேணுமென்றுவினவ இவள் மனது ஆனந்தபரவசமாகி மணந்துகொள்ளும்படி வேண்ட சுப்ரமண்யக்கடவுள் கருணைகூர்ந்து நீவேள்விமலைச்சார்பினிட மாகப்பிறந்து வளர்ந்துகொண்டிரு நான் வந்து கல்யாணஞ் செய்துகொள்கிறேனென்று திருவருள அவ்விதமாகவே வந்து அவதரித்திருக்கின்முள். இன்றுகலகம்செய்வதற்கு ஏதுமில்லை யென்றிருந்தேன். இதுதான் சமயம். கலகத்தையுண்டுபண்ணி முருகனுடைய திருவிளையாட்டைக்கண்டு ஆனந்திக்கின்றேன் இதோ அருகிற் செல்லுகிறேன்.

## நாரதருக்கும் வள்ளிக்கும் தர்க்கம்

இராகம்-பிலஹரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்

நா — வேள்விமலைச் சார்பினிட
தேவிவாழ்பெண்மணிநீ யாரினியே

வள் — எந்தநாளும்புகழ் சிற்றூரா
சாளும்நம்பிராஜன் புத்திரிமுனியே

நா. வச—பெண்மணியே இந்தவேள்விமலையருகில் நீவாசஞ்செய்து கொண்டிருக்கிறுய் நீ யார் கூறுவாயாக.

வள். வச—முனிபுங்கவரே யானோ சிற்றாரில் அரசுபுரிந்துவருகின்ற நம்பிராஜனுடைய புத்திரி. தாங்கள்யார்.

பாடல்

ஷெமெட்டு.

நா — உன்னுடைய நாமதேயம் நன்னயமாகவே
சொல்வா பினியே

வள் — பூவில்என்னுடபேர் வள்ளியென்பார்
பொன்னுலகோர்கொண்டாடு மாமுனியே

நா- வச—யானோநாரதமுனி. உன்னுடையபேரென்ன பகர்வாய்

வள்- வச—மாதவரே என்னுடையநாமதேயமானது வள்ளி என்று கூறுவார்கள்,

பாடல்

ஷெமெட்டு

நா — இந்தக்கானில் நீதனியாய்
வந்திருப்பதேனோ சொல்வாயினியே

வள் — எந்தன்தந்தைசொன்ன வாக்கியத்தால்
செந்தினைவனமேகார்த்தேன் முனியே

நா- வச—இந்த ஆரண்யத்தினிடமாக நீதனியாய் இருக்கிறகாரணம் யாது.

வள்- வச—சுவாமி என்னுடைய பிதாவின்வாக்கியத்தின்படி தினை காத்துக்கொண்டிருக்கின்றேன்.

பாடல்

ஷெமெட்டு

நா — நல்லதிருமணமாச்சோ வள்ளியே
பகர்வாயுகந் தினியே

வள் — இந்தத்தொல்லுலகினின்னு மண
மில்லையேயாழினையேந்து முனியே

நா-வச—வள்ளியே உனக்குமங்களகாரமுடிந்துவிட்டதோ சொல்வாய்

வள்- வச—நாரதபகவானே இதுவரை எனக்குக் கல்யாணமில்லை. சுவாமி.

## பாடல்
### ஷிமெட்டு

நா — ராஜவடிவேல் துதிக்க நேசமாக
ராசிகண்டே னினியே

வள் — இன்றுவாசமாக நீர்தான்கண்ட
ராசியைப்பகரவேணு முனியே

நா-வச —வள்ளிநாயகி எனக்கு ஒரு நல்ல ராசி காணப்படுகிறது. அதையாலோசிக்கும்போது பரமானந்தத்தைக்கொடுக்கின்றது

வள்-வச—முனிபுங்கவரே தாங்கள்கண்டராசியின்விசேடமென்ன அதைத்தெரிவிக்க வேணும்.

நா- வச—அதையெடுத்துக்கூறினால் உனக்குஏதேனும் வருத்தங்கள் நேரிடுமோ? அப்படிவருத்தப்படுவாயாகில் நான் கூறவில்லை. சந்தோஷங்கொள்வாயாகில்அதன்விர்த்தாந்தத்தைப்பகருகின்றேன்.

வள்- வச—அந்த விஷயத்தைக்கூறுவீர் சுவாமி.

### நாரதர் வெண்பா.

திருத்தணிகை வேலவர்க்குந் தேவி யுனக்கும்
பொருத்த மெனக்கண்டேன் பூவில்—கருத்துடனே
நானுரைத்தா லுவந்து நன்மணமே நீபுரிந்தால
வானவரு மேவணங்கு வார்.

வசனம்—வள்ளி நாயகியே எனக்குத்தோற்றிய விஷயம்யாதென்றால் திருத்தணிகாசலக் குமரனுக்கும் உனக்கும் மங்கள பொருத்தமாயிருக்கிறபடியால்நீமுருகனைத்திருமணஞ்செய்து கொள்வாயாகில் அஷ்டதிக்குபாலர்களும் முப்பத்திமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரரிஷீஸ்பரர்களும்வேதங்களும் வணங்கியேகொண்டாடுவார்கள், இவ்விதக்குறிப்புஎனக்கு

துலக்கமாகத் தெரியவந்தது. ஆகையினாலே தெரிவித்தேன் உன்னுடையமனது தெரியவில்லை, யாது கூறுகின்றாய்.

## வள்ளியம்மன் பாடல்.

### ரெங்கநாயகமே என்ற மெட்டு.

பல்லவி

போதும் போதுமே
பொருத்தமே நீரெனக்குச்சொன்னது (போ)

அநுபல்லவி

புவிமீது வுமக்கடுக்காது செல்வி
ரிப்போது முனிவரே (போ)

சரணம்

நல்ல பொருத்தமே சொல்வீ ரென்றிங்கு
நாரதரே யும்மை நேராயழைத்தேனே
நானே பொறுத்திடேனே யிருப்பிடந்
தானே யேகுவீர் (போ)

எந்தனண்ணன்மார்கள் வந்தாலும்மை விடார்
இருடியேயுமக்கிது சரியல்லகூறினேன்
என்ன துணிவா யென்முன்னமிப்படிச்
சொன்ன வார்த்தைகள் (போ)

வசனம்—நாரதமுனிவரே உம்மை எனக்குப்பொருத்தம்பார்த்துக் கூறும்படிநான் அழைத்தேனோ. பொருத்தங்கூறியதுபோதும் தவசிகளுக்கு இது அடுக்குமா. பேசாமல் போய் வருவீர்; மெத்தப்பேசவேண்டாம்.

## நாரதர் பாடல்

### துலங்கிடுமீனாக்ஷி என்ற மெட்டு.

பல்லவி

திருத்தணிகாசல சண்முகானந்தன்—வடிவேல் கந்தன்
சித்தர்மனத்துறை ஞானாநந்தன்

அநுபல்லவி

வருத்தஞ்செய்சூரரை வதைத்துமேயமரரை
வந்தாதரித்தவன் சதுர்மறை
வாசன் சர்வேசன் சிவனுக்குபதேசன்
மந்திரன்தந்திரன் மகிமையறிது (தி)

சரணம்

நாரணன்மருமகன் நம்பினோர்க்கருள்சுகன்
ராஜவடிவேல் தொழும்ராகநாதன்
நாதன்அத்வீதன் மெஞ்ஞானபோதன்
நத்துவோர்சித்தமே நலமேபுரிவோன் (தி)

வசனம்—வள்ளிநாயகி தணிகாசலத்தில் எழுந்தருளியிருக்கின்ற முருகனுடையமகிமையை இவ்வளவென்று அளவிடமுடியுமா முடியாது. சூரபத்மன் தாருகன் சிங்கமுகன் முதலாகிய அசுரர்களை வதைத்துதேவர்களையாட்கொண்டசண்முகப்பெருமான் வந்து உன்னைத்திருமணஞ்செய்தால் பிரம்மா விஷ்ணு ருத்திரனென்கப்பட்ட திரிமூர்த்திகளும்மகிழ்வார்கள். தேவர் விஞ்ஞையர் முனிவரெல்லோருங்கொண்டாடி சதாதொழுது கொண்டிருப்பார்கள். இதற்கு நீதடைசொல்லாதபடி சுப்பிரமண்யக் கடவுளைக்கல்யாணஞ் செய்து கொள்வாயாக.

## வள்ளியம்மன் பாடல்

மருவேசெறித்த [illegible]

கன்ன[illegible]

எனையேயடுத்து முனியேயிருத்[illegible]
இனிதாகமெத்த பசாதிர்
சினமேமிகுந்தே ம[illegible]மும்பொருந்தேன்
இடமாயகன்று செல்வீரே

வசனம்—முனிவரே என்னிடத்தில் [illegible]ண்டாம். எனக்குக்கோபம்வந்துவிடும், எதா[illegible]ச்சென்றுவிடுவீர்

## நாரதர்பாடல்

தேவாதிதேவா என்றமெட்டு.

கண்ணிகள்

வேலவனுன்னைமிக்க்கொண்டாடி—வந்து
மெத்தமணமேசெய்யும்படிநாடி
சாலவேயவன்மேற்சங்கீதம்பாடி—எந்தன்
சபதம்முடிப்பேன்பேரன்பதுகூடி
வள்ளியேபாரினியானுமின்று—உம்பர்
வாசமிருந்தணிகாசலஞ்சென்று
வள்ளல்முருகனிடமேநயன்று—வுன்
மனதைக்கவரும்படிசெய்வேனென்று

## (விஷயம்)

இவ்விதமாக வள்ளிநாயகியிடம் சபதங்கூறிவிட்டு பிரம்மானந்தமாக ராமகீதம்பாடி யாழினைமீட்டிக்கொண்டுநாரதர் தணிகாசலத்துக்கு சண்முகப்பெருமானைக்கண்டு தெரிசிக்கச்செல்கின்றார்.

—❖—

5-வது சீன்

# திருத்தணிகை

முருகன் எழுந்தருளியது.

பாடல்

## பரப்ரம்மர் துதி.

நாதவிந்துகளாதி என்றமெட்டு,

கண்ணிகள்

| | | |
|---|---|---|
| ஆதிதிவ்யபரனே | நமோநமோ | |
| சோதியெங்குந்நிறைந்தாய் | நமோநமோ | |
| ஆரணம்பணிபவா | நமோநமோ | வருள்நீதி |
| நீதில்ஞானவொளியே | நமோநமோ | |
| க்யாதிசேர்பிரபரா | நமோநமோ | |
| தேடியேபணிந்தேனே | நமோநமோ | வரமேதா |

## கதாசாரம்

இவ்விதமாகத் தணிகாசலத்தில் முருகன் எழுந்தருளியிருக்கும் போது நாரதபகவான் ஆனந்தமாய் நர்த்தனஞ் செய்து கொண்டு சண்முகநாதனைத் தெரிசிக்கவருகின்றார்.



### நாரதர் முருகனைத் துதிக்கின்றார்.

வெண்பா

ஆறுமுகனே யமரர் துயர்தீர்த் தவனே
வேறு துணை யில்லை வேலவனே—தேற
வுனையே கெதியென்றே னுள்ள மகிழ்வாக
வெனையே தநியா ளினி

பாடல்

சுஜனஜீவனு என்ற மெட்டு.

பல்லவி

சரணம் வேலவா தேவா
தநியே யாளவா

அநுபல்லவி

பரமன்றேசிகா வேதம் பரவுமாசுகா
பவநிக்ரக தவசற்குண புவன ரக்ஷகா தேவா(ச)

சரணம்

மாதுபார்வதியருட்குமாரா வர்துகாரையா
மாமயூரவா நீமகிழ்வாய் வரதசண்முகா
நாதபோதனே வெகு நன்மைநீதனே
நாடியேதமிழ்ப்பாடிச்சந்ததம் ராஜவடிவேல்கான் தேவா(ச)

வசனம்—சண்முகா சரவணபவா சடாக்ஷரப்பொருளே மாதவன் மருகா வடிவேல்முருகா மயில்வாகனு வானவர்சேனபதி தணிகாசலக்குமரவேளே நாரதன் முறைசெய்கின்றேன்.

## தணிகாசலமுருகன் பாட்டல்

இந்தக்கிழவனுன்னை என்ற மெட்டு.

கண்ணிகள்

மாமுனிநாரதரே வந்தசெய்தியிப்போது
பூமிவிசேடமுண்டோ பொருந்திடஎன்முன்னோதும்
திரிலோகசஞ்சாரஞ் செய்பவர்நீரென்றே
பரிவுடன்கேட்கலுற்றேன் பகருவீர்மகிழ்ந்தின்றே

வசனம்—நாரதமுனிவரே வந்தகாரணம்யாது பூலோகத்தின்கண் விபரீதமான அதிசயங்கண்டீரோ. யாதுவிசேடம்பகருவீர்.

## நாரதர்சொல்கிறது.

விருத்தம்

தானவர் குலங்கள்தன்னைச் சதிசெய்து கருவறுத்த
ஞானசண் முகனேயுன்முன் நவிலுவேன் விபரமாக
கானிடை மார்க்கந்தன்னிற் கனியொன்று கண்டதாலே
யானுமே கூறவந்தேன் அறிதறி தாருமின்றே

## முருகனுக்கும்நாரதருக்கும் தர்க்கம்

மார்க்கத்திற்கண்ட என்ற மெட்டு.

கண்ணிகள்

மு — கானகத்திற்கண்ட கனியின்பெருமைசொல்
கமலோனருள் சுதனே

நா — அறிதானசுகந்தரு மின்பக்கனியது
தணிகைவே லாயுதனே

மு — எறியேபறித்துத்தின்னக் கிளையுண்டோ
வியம்பிடுவீர் முனியே

நா — மிதக்கூறென்னுவிரண்டு கொம்புகளேதிருண்டு
குயிலிசை யக்கனியே

மு — பெண்களுக்குரிய குணங்குறியாகுதே
பேர்புகல் நாரதரே

நா — காணக்கண்களனந்த மாகோடிவேணுமந்தக்
கனிக்குநிக ரெவரே
மு — நலமுறவேயதை விஸ்தரித்துச்சொல்வீர்
நாடியே யிதுதகியே
நா — வேள்விமலையருகிற் றினைவனங்காக்கும்வள்ளியே
வடிவழ கதிபதியே

## விஷயம்

வள்ளிநாயகியினுடைய விர்த்தாந்தங்களை யெடுத்துக்கூற அவளுடைய உருவை எழுதி வந்திருக்கின்ற படத்தைக்காண்பிக்க முருகன் மயக்கங்கொள்ளவும் தெய்வயானை வந்து நாரதரை வினவுகின்றாள்.

### தெய்வயானைபாட்டல்

### கார்த்திகா நித்யகல்யாணு என்ற மெட்டு.

கண்ணிகள்.

தேவர்சேனுபதி வேலன்
சித்ரமயூரமா சீலன்
காவலன்சண்முக லோலன்
காரணசுருதி விசாலன் (தே)

சோர்ந்துமேமயங்கின தேது
சொல்லுவீர்முனியே யிப்போது
சார்ந்துமேசெய்தீரோ சூது
சரியல்லகபடமா காது (தே)

மாதவரேவிண்கொண் டாட
வழமையேநகலகமே பாடம்
தீதில்லாமுருகனும் வாடச்
செய்தீரோமனமது நாட (தே)

வசனம்—நாரதமுனிவரே என்னுடைய காதலன் சண்முகப்பெருமானுக்கு இவ்வித மயக்கம்வந்தகாரணம்யாது. யாருயிவ்வாறு செய்தனர் அல்லது தாங்கள்செய்தீரோசரிசரிதெரிந்துகொண்

டேன் உமக்கு எப்போதும் கலகமே பாடமாயிருப்பதால் நீர் தான் கருணைவல்லபனுகியமுருக்கடவுளை இப்படி மயங்கச் செய்திருக்கக்கூடும், ஒழியாமற்பகரவேணும்.

## நாரதர் விருத்தம்

வானவர் புகழுந்தெய்வ மங்கையேசினங் கொள்ளாதே
கானக வள்ளிமின்னைக் கண்டவ ளுரு வமைத்து
யானுமே கொண்டுவந்தேன் அன்புடன் பார்த்துன்றுதன்
ஞானவே லவள்மீதுற்று நாடியமயக் கந்தானே

வசனம்—தெய்வகுஞ்சரிவேறுசந்தேகம்கொள்ளாதேநான்திரிலோக சஞ்சாரஞ்செய்துவரும்போது வள்ளியானவள் வேள்விமலை அருகில் தினைகார்த்துக்கொண்டும் இந்த முருகப்பெருமானை பக்திவிசுவாசத்துடனேபாடிக்கொண்டும் பக்ஷிகளையோட்டிக் கொண்டிருப்பதைக்கண்ணுற்று இந்தச் சண்முகனைப்பாடிய இன்பத்தைக்கண்டு அவளுருவைப்படமெழுதிக்கொண்டுவந்து காண்பித்தேன்பார்த்தவுடன் உன்னுடையநாயகனுகியவேலவன் மயங்கிஞல் அதற்குயானென்னசெய்வேன் என்மீது சந்தேகப் படுகிறுய்.

## தெய்வயானைபாட்டல்

### நீதனேகந்தநாதனே என்ற மெட்டு.

கண்ணிகள்

ஞானமந்த்ரவுபதேசனே பிரகாசனே இந்த
ஞாலமீதுனக்குக் கோலமயங்கள்
ஞாயமோ சம்ப்ரதாயமோ
வானவர்க்கதிபநாயகா எந்தன் தாயகா வள்ளி
மாதின்மீதினுற்ற காதலின்மயக்கம்
வந்ததோ அங்குவந்ததோ
சென்றவளினுசைதிரட்டும் நன்மைசேரட்டும் எந்தன்
தீரனேகுண்டினி நாரதர்செய்சூது
தெரியேனேயொன்று மறியேனே
நன்றுறைதணிகைநாதனே செம்பொற்பாதனேகூடல்
ராஜவடிவேலன் நேசவுல்லாசனே
நாடினேன் அன்பு கூடினேன்

## விஷயம்

இவ்விதமாக தெய்வயானைகூறவும் முருகனெழுந்து நாரதர் கூறிய வண்ணம் வேடனாக வேடம் பூண்டு வள்ளியானவ ளிருக்கக் கூடிய வேள்விமலைச் சாரினிடம் தேடிச் சென்றனர்

### 6-வது சீன்
## தினைவனம்

வள்ளிநாயகிபாடல்
குமரனையே என்ற மெட்டு.

பல்லவி

அரிமருகா சண்முகானந்தவேல்முருகா
அரிமருகா சண்முகானந்தவேல்முருகா

அநுபல்லவி

ஆனந்தவேல்முருகா ஆனந்தவேல்முருகா (அ)

சரணம்

வல்லசூரசம்மாரா வானவருக்குபகாரா
நல்லசேவைதருபவனே நாடியேகுன்றுறைபவனே (அ)

(தொகையறு)

தணிகாசலக்குமரனேயமரனே சங்கரர்க்குபதேசகுருபரனே
பிணியிடரதையேதீர்ப்பவனே குகனேசரவணபவனே

பாடல்

ராஜவடிவேல்சகாயா மங்கைதெய்வயானைநேயா
வாசமிகுமோகனனே வன்னமயில்வாகனனே (அ)

### குமரவேடன் வள்ளியைநோக்கிவருணித்தல்
பாலாபிஷேகப்பழனி என்ற மெட்டு.

கண்ணிகள்

ஆலோலம்பாடியே பரண்மீதிருக்கின்ற
ஆரணங்கோ திவ்யரூபவதி
சீலமிகுந்திடும் லீலாவிநோதமாய்
சிந்தைமகிழச் செய்புண்யவதி

தொகையரு

பாலோகிகர்மொழி பத்மினிமாது
சேலோவிழிமினள் சீர்புவிமீது

பாடல்

அரிவையரெவருமே யிவட்கிணையேது
அழகியஇவள்போ லெங்குங்கிடையாது
ஆசைக்கிசைந்துள்ள மோகனசரசி
நேசத்தினிதின்ப மின்னரசி
ராஜவடிவேல்தமி ழலங்காரி
நானும்பிரியேனிவளோ வொய்யாரி (ஆ)

வசனம்—ஆஹா என்னகாந்தி என்னசொரூபம் என்னபிரகாசம் இந்தப்பரண்மீது உலாவிநிற்பவள் அன்னப்பேடோ மின்னற் கொடியோ கவண்வீசி வாலோலமபாடுகின்றவாயினூறல கற் கண்டோ தேனே தேவாமிர்தமோ இவளுடைய வார்த்தை குயிலிசையோ இவளைச் சற்றுநேரமாகிலும் பிரியமனமிராது நாரதர் சொன்னது சரி அருகிற் செல்லுகின்றேன்

வள்-வச்—அடியேசிவகாமு பக்ஷிகளெல்லாம்வந் தகதிரையழிக்குது ஓட்டடி. சோ சோ சோ.

சிவ-வச—வள்ளிநாயகியிதோவோட்டுகின்றேன். சோ சோ சோ

குமரவேடனுக்கும் வள்ளிக்கும்

தர்க்கம்

பார்ஸி மெட்டு.

இராகம்-இந்துஸ்த்தான்பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்

வேட — மானிங்குவந்ததுமா மயிலே
வஞ்சியேயாஞ்சிதமுங் குயிலே
வன்னமான்சொர்ன்னமான் பொன்னெனிமான் (மா)

வள் — மானெங்கேபோனதோ வேடரோநீர்
வந்துமயங்கியிங்கு தேடுநீர்
மட்டில்லாமான்கிட்டிடாமாள் வலைதப்பிமான் (மா)

வே — வன்னக்குறமான்களே சொந்தமான்
வலேதப்பியேவந்ததிங் குற்றமான்
வாகுள்ளமான்மோகனமான் வடிவுள்ளமான்(மா)

வள் — மானுக்கடையாளமே சொல்லுவீர்
வந்தவழிதேடியே செலலுவீர்
மாசில்லாமான்கேசிக்குமான் வல்லபமான்(மா)

வே — மானிதுவாகுமெனக் கின்பமான்
மார்பிலிரண்டுகொம் புள்ளதோர்மான்
வனக்குறமான்எனக்கிசைமான் வள்ளியென்மான்(மா)

வள் — வார்த்தைகள்மெத்தப் படித்திடாதீர்
வந்துமேயென்னே யடுத்திடாதீர்
வனத்தினில்மான் உனக்குள்ளமான் வரவில்லேமான்(மா)

## தர்க்கம்

ஜெயகாந்திமகான்போலுண்டோ என்ற மெட்டு.

பல்லவி

வே — அடி—மானேசரசசல்லாபமுள்ளவஞ்சியே-காதல்
மிஞ்சியே வந்தேன் கெஞ்சியே

வள் — உமக்—கேனேபைத்தியமோவந்துபாடுறீர்-மானேத்
தேடுறீர் மனம் வாடுறீர்

அநுபல்லவி

வே — கானிடைதேடி காதலிதேடி
கனகமயிலன்னமே யென்சொர்ன்னமே
விற்பன்னமே வாதின்னமேன்—உன்னேக்
கண்டுஆசையே கொண்டுவந்தேனே
அண்டியேகற்கண்டு செந்தேனே
கலந்துமிகச்சுகந்தந்திடநலந்திகழும்வெகுரஞ்சித (மா)

வள் — வீணுகவாது ஞானமிலாது
வேடரேசெய்வதின்னேர என்னசாரம்
ஆறவார வார்த்தைபோரும் அதி
வீரமாயண்ணன் மார்கள்வரும்

சேரமாகுது ஜெயம்பெறும
மிகவேயமர்புரிவரினிவிரைவுடனேயிடமேசெல்வீர் (ஏ)

வேட- வச—பெண்களுக் கரசியே உன் மீது பிரிதியுற்று இங்கு வோடிவந்தேன் வேறொன்றுஞ் சொல்லாமல் என்னை மணந்து கொள்வாயாக.

வள்-வச—வேடரே வீணாகவந்து புலம்புவதினால் பிரயோஜனமில்லை என்னுடைய அண்ணன் மார்கள் வந்தால் உம்மை லேசில் விடார் எதாஸ்தானஞ் செல்வீர்.

## வேடர்கள் வருகிறது

### பாடல்

ராஜவிசுவாசலாலா என்ற மெட்டு.

பல்லவி

வானவர்க்கமுதளித்த மால்மருகா
திருமால்மருகா திருமால்மருகா

அநுபல்லவி

ஞானசற்குருவே நாதாந்தவுருவே
மீனம்பிகையருள்வடி வேல்முருகா
வடிவேல்முருகா வடிவேல்முருகா (வ)

தொகையரு

தீனரக்ஷகனே திருத்தணிகைகுகனே
சிவபிரான் தேசிகனே
தானவர்காலனே சற்குணசீலனே
தாஸர்கட் கனுகூலனே (வ)

சரணம்

சாமிசண்முகனே தயருள்சுகனே
பூமிராஜவடிவேல் போற்றும்பூரணனே
பரிபூரணனே பரிபூரணனே (வ)

## கதாசாரம்

இவ்விதமாக ஆரவாரத்துடனே வேடர்கள்வருவதையறிந்து முருகக்கடவுள் வேங்கைமரமாகி ஆகாயத்துக்கும்பூமிக்குமொன்றாக வளர்ந்திருக்கவும் வேடர்கள்வந்து வள்ளியை வினவுகின்றார்.

## வேடர்கள்வள்ளியைநோக்கிவேங்கைமரமான விஷயம்வினவுதல்

### துலங்கும்செம்பொன் என்ற மெட்டு.

கண்ணிகள்.

மிருந்துஇங்கு வானமளாவி
வேங்கைமரமுளைத்து விகசிதமாயுயர்ந்துமே
இப்போதுண்டானவகை யறியோம்சிறந்துமே
வித்தகமுள்ள உத்தமதங்கையே (விக)

இத்ததியிங்கு மெத்தவளர்ந்து (வி)
இதுவரையில்லா நதிசயங்கண்டோம்
எங்கும்புகழ்பெறவேயி துவுங்காக்ஷிகண்காக்ஷியே
அற்புதமாகயிலங்குதே வெகுருக்ஷியே (மி)

## வள்ளிசொல்கிறது

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி

இதுதானதிசயமே அண்ணா
இதுதானதியசமே

அநுபல்லவி

இக்குற்றசங்கதி தங்கைநானறிகிலேன் (இ)

சரணம்

பதிதனிலிவ்விதமாகியசூழ்ச்சி
பார்த்ததுமில்லையே யற்புதமாக்ஷி
நதியணிபரமனின் குமரவேள்காக்ஷி
நன்னயமாகவே தோணுது
உன்னதமாகவே காணுது (இது)

வேட-வச—வள்ளிநாயகியிந்தவேங்கைமரமுண்டானகாரணம்யாது

வள்- வச—அண்ணா இதுவந்தவிபரம்தோணவில்லை, இது முருகனுடையசெயல்.

## விஷயம்

இவ்விதமாயதிசயித்து கோடாரியால் வெட்டவே வெட்டுப் பட்டிருக்கவேலவனுடையசெயலென்றுவேர்மையுற்றுதங்கைக்கு இடங்கூறிவேடுவர்கள்செல்லவும் முருகன்வேடன்வடிவுடனேவந்து வள்ளியிடம் வார்த்தையாடுதல்.

## தர்க்கம்

சுதேசமகமத்தலி என்ற மெட்டு.

பல்லவி

வே — கனகமயிலன்னமே காதல்தீரென்சொர்ன்னமே

அநுபல்லவி

உனையேபிரியேனடி ஒருமுத்தந்தருவாயடி

பல்லவி

வள் — மெத்தவேவார்த்தையாடுறீர்வேடரேஇங்குநாடுறீர்

அநுபல்லவி

நத்திவருகிறீரின்னம்நானிணங்கிடேன்விற்பன்னம்

சரணம்

வே — அன்புடனுன்மணம்புரிவாய் அதாமிர்தந்தருவாய்
இன்பமேதந்திடுஞ்சரசி எந்தனின்மின்னரசி (க)

தொகையரு

வள் — அறிவதுமாறியே யண்டியேவேடரே
ஆண்மையாய்ப் பேசிடாதீர்

வே — குறியொடுகிருபை கூர்ந்துமேவாயூரல்
கொடுத்திடுவாய் வள்ளியே

பாடல்

வள் — ஞானமில்லாதவேடரே நன்னெறியில்லாமூடரே
யானுமேசம்மதியேன் அகன்றிடுவீர்கதியே(மெ)

வே- வச—வள்ளிமின்னரசி உன்மீது ஆசைகொண்டு வருந்துவது உன்மனதிரங்கவில்லையா தயவுசெய்துமணஞ் செய்துகொள் வாய்.

வள்- வசன—வேடரே ஞானமில்லாமல் புலம்பிக்கொண்டிருக்கிறீர் அப்பாலேசென்றுவிடுவீர்.

## தர்க்கம்

### நாதந்திஞதந்திஞ என்ற மெட்டு.

கண்ணிகள்

வே — வஞ்சியேகெஞ்சினேன் அஞ்சகாஞ்சிதம்
கொஞ்சந்தயைசெய்யடி மயிலே
தஞ்சந்தயை செய்யடி

வள் — வந்தமிகுந்தவிரைந்து வுகந்திடமே
எந்தன்முன்னேபேசாதீர் செல்வீர்
உந்தன்கையை வீசாதீர்

### தொகையறு

வே — மாசில்லாப்பெண்மணி நேசமாயிப்போது
வள்ளியே தயவில்லையோ

வள் — கூசாமலென்னிட பேசிடஞாயமோ
கொஞ்சமுமிணங் கேன்வேடரே

### பாடல்

வே — வாகானகற்கண்டு பாகானதோர்மொழி
மோகனமின்னரசி மாலைசூ
யோகமுள்ளசரசி

வள் — வீணனவார்த்தைக ளேனேபடிக்கிறீர்
ஞானங்கெட்டமூடரே இதுசரி
தானேவண வேடரே

## கதாசாரம்

இவ்விதமாய் வள்ளியும் முருகக் கடவுளாகியவேடனும் வார்த்தையாடிக்கொண்டிருக்குங்கால் வேடர்கள் ஆரவாரத்துடன் வருகிறசப்தங்கேட்டு சண்முகப்பெருமான் மறைந்து கிழப்பண்டார வேடம்பூண்டு வேடர்கள் முன்பு சந்திக்கிறார்.

## முருகவேள்பண்டாரம் பாடல்

மாயவாடை என்ற மெட்டு

கண்ணிகள்

மார்வேலேபெரித்த கிராதர
சிருலாவியதிங்கள் கெங்காதர
மானதையேந்திடுங் கருணாகா — பரமேசா
பாரதிலென்னையே வந்தாள்பவா
ஆரணமிமையோர்கள் பணிபவா
பாதமேகெதியம்பிகை மகிழ்பவா — ஜெகதீசா

## விஷயம்

இவ்விதமாய்வருகிறபோது வேடர்கள்சந்தித்து அன்புமிகுந்து பக்திவிசுவாசத்துடனேயுண்மைபாராட்டிவேண்டி முருகவேள் பண்டாரத்தை வினவுகின்றார்கள்.

## தர்க்கம்

செந்திமாநகர்வாழ் என்ற மெட்டு.

கண்ணிகள்

வே — இந்தக்கானகத்தில் சிந்தைநொந்துவந்த
தேதுசொல்வீரையனே இன்று
கோதில்லாதமெய்யனே சாமி
யிப்படிவருந்திபொப்பில்லா நீர்வர
எற்குமோ மாதய்யனே

முரு — அமரர்புகழ்கன்யாகுமரி தீர்த்தமாட
யானுகந்துவந்தேனே இந்தக்
கானதிற்றளர்ந்தேனே இங்கு
அன்புடன்வாசஞ்செய்தின்பமாயேகிட
ஆசையோமிகுந் தேனே

வே-வச—ஐயாபண்டாரப்பெரியவரே தாங்கள்இந்தக்கானசத்திலிடமாக வருந்திக்கொண்டுவந்த காரணம்யாது தாங்களோவிருத்தாப்பியமாய்விட்டதே

முரு- வச—யானேவிருத்தாப்பியன்தான். கன்னியாகுமரிதீர்த்தம் ஆடுவதற்கு பிரிதியுற்றவனுகையினலே இந்த ஆசிரமத்தில் இன்று இளைப்பாரிச்செல்லவேண்டியதாகயிருக்கிறது. நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களாக.

## கதாசாரம்

இவ்விதமாகக் கூறவும் வேடர்கள் ஆதரித்து அழைத்துக் கொண்டுவந்துதங்கையாகிய வள்ளியிடம்ஒப்பித்துபாதுகார்க்கும்படிசெய்து அவர்கள் இருப்பிடஞ்செல்லவும் முருகவேள் பண்டாரம் கூறுகின்றார்.

## முருகவேள்பண்டாரத்திற்கும்வள்ளிக்கும் தர்க்கம்

### பாட்டல்

அம்பாள்மதுரை என்ற மெட்டு.

கண்ணிகள்

முரு — மெத்தப்பசிமயக்கந்தீர வள்ளி
மின்னேநீயுபகாரம் செய்குவாய்
மிகவேயமு தின்னேரம்
வேண்டினே னுபாரம்

வள் — அன்னங்கதிவகைகிராது நாதா
அடவியில்மயங்காது தினைமா
அன்புடன் றருவேன் மாது
அருந்துவீரிப் போது

முரு- வச—இந்தநேரம் பசியாயிருக்கிறது. எனக்குக் கொஞ்சம் அன்னம் அளிப்பாயாக.

வள்— வச—தாதா இந்தக்கானகத்தில் அன்னமுதலானகறிவகைகள் கிடைக்க மாட்டாது. இதோ தினைமாவிருக்கிறது. தேனிற் பிசைந்து தருகிறேன். அருந்துவீர்.

முரு— வச—வள்ளியே மற்றஉபகாரமில்லாதபோதிலும் இந்த உப காரம் செய்குவாய்.

வள்— வச—தாதா இதோ தினைமாவு அருந்துவீர்.

## தர்க்கம்

### பஞ்சவடி தன்னிலே என்ற மெட்டு.

கண்ணிகள்

முரு — வஞ்சகஞ்செய்தாயடி மாவில்
நஞ்சைக்கலந்தாயடி மெத்த
மயங்கியுன்னாலே தயங்குறேனடி
மாயமென்னசெய்தாய் சேயிழைவள்ளியே (வ)

வள் — வஞ்சனைசெய்தறியேன் தாதா
சொஞ்சமும்குதறியேன் மன
வருத்தங்கொள்ளாதீர் திருத்தணிகைவேள்
மர்மமோதெரியேன் வர்ம்மமோகுறியேன் (வ)

முரு — சமையசஞ்சீவியடி நீ
இமையில்மறைப்பாயடி இந்தத்
தருணம்உதவி புரிவாயன்னமே
சத்தியமாகநீ மெத்தவேசமத்தி (வ)

வள் — நல்லஉபகாரமே செய்ய
வில்லங்கமின்னேரமே வர
ஞாலமீதுகதிர் வேலவன்செயலோ
நானிதற்கென்செய்வேன் ஞானபண்டாரமே (வ)

முரு — மாசில்லாவள்ளியடி நீதான்
பாசாங்குக்கள்ளியடி உந்தன்
மருமமறியேன் தருமமல்லடி
மனதுவெருக்கக் குணமும்மல்லடி (வ)

வள் — என்னுடையகாலமோ வேலன்
தன்னுடையஜாலமோ தாதா
இப்படியென்னையே செப்புதல் ஞாயமோ
ஏற்காதவார்த்தைகள் தீர்க்கமாய்ப்பேசுறீர் (வ)

வள்-வச—தாதா இவ்விதமாக என்னை ஏசுறதும் பேசுறதுமிருந்தால் என் மனம் சகிக்கமாட்டாது ஈதென்ன கிரஹச்சாரம்.

முரு- வச—வள்ளியே கோபம் வேண்டாமடி உன் மயக்கமும் தாகமும் தீருகிறதற்கு தண்ணீர்வேணுமே ஈதாகிலும் கொடுப்பாயடிநீ பௌத்திரியாகப் பாவித்து பேசுகிறேனொழிய வேறுகபடமாக நினைக்காதடி.

வள்- வ்ச—தாதா பெரியவரே யிதோ சமீபத்தில் ஒரு சுனையிருக்குது அங்குவருவீர் தாகத்துக்கு அருந்துவீர்.

[வள்ளியுடனே முருகவேள் பண்டாரம் செல்லுகின்றூர்]

## தர்க்கம்

### இந்தஉடலைநம்பி என்ற மெட்டு.

கண்ணிகள்

வள் — தண்ணீரருந்துவீர் தாகந்தீர
எண்ணுதமெண்ணும விந்தநேரம்

முரு — வள்ளியேயென்னைச் சுனையிலின்று
தள்ளிவிட்டாயடி நன்றுநன்று

வள் — என்னசெய்வேனினி யெந்தன்காலம்
புன்னிருகைவேலன் செய்திடுஞ்சாலம்

முரு — இந்தக்கிழவனுனக் கெளிதோ
எந்தனைக்கைக்கொண்டால் மிகப்பழுதோ

## கதாசாரம்

இவ்விதமாயிருக்கும்போது வள்ளியானவள் முருகவேள் பண்டாரந் தன்னை கையினலெடுத்துக் கரையேறிவரவும் முருகன் கல்யாணஞ் செய்துகொள்ளடி யென்ன வள்ளி சினந்து பண்டாரக்

கிழவரே வெகு நேர்த்தியாயிருக்குதென்று பேசியகன்று சென்றாள் முருகன் அவளை நோக்கி வள்ளி நீ யிந்தக் காட்டில் மிருகசோஷ்டங்கள் அதிகமாயிருக்குதே யெப்படி பயமில்லாதிருக்கிறாய் என்ன? மிருகங்களில் ஒரு மிருகத்தைக்கண்டால் பயமுண்டாகுமென்றாள். முருகன் தந்திரமாக மிருகங்கள் பெயரை ஒவ்வொன்றாய்ச்சொல்லிகொண்டு வந்தார். கடைசி யானை யெனவும் வள்ளியலறினாள் இதை அறிந்துகொண்டு அண்ணனாகிய கணபதியை தியானிக்கின்றார்.

## முருகவேள் பண்டாரம் விநாயகரை தியானித்தல்.

பாட்டல்

ராஜவிசுவாசலாலா என்ற மெட்டு.

பல்லவி

கார்த்திட வருவாயண்ணா கணபதியே
அண்ணா கணபதியே அண்ணா கணபதியே

அநுபல்லவி

சீர்த்தி தழைத்திட செல்வமிகுத்திட
பார்த்தருளவேணுமுந்தன் பதம்பணிந்தேன்
உந்தன்பதம்பணிந்தேன் உந்தன்பதம்பணிந்தேன் (கா)

தொகையரு

மானைநிகர் விழியாள் தேனைநிகர் மொழியாள்
வள்ளிமணம் திரும்பவே தேவா
யானை யுருவாகவே சேனையொடுவிரைவாக
அண்டியேஓடி வாவா

சரணம்

சிந்தையில்நினைந்தேன் திருவருளுதந்தே
சொந்தமாய்ராஜவடிவேல் துதிப்பவனே
அன்பர் துதிப்பவனே அன்பர் துதிப்பவனே (கா)

## விஷயம்

இவ்விதமாகவே விநாயகரை நினைக்கவும் அவர் காட்டானையாக அகோரசப்தத்துடனே வரவும் வள்ளிநாயகி நடுநடுங்கி மனம் பதைத்து ஓடி பண்டாரமாகிய முருகனைக்கட்டிப்பிடிக்கச்செல்லும் போது முருகவேள் ஓடுகிறார்.

## தர்க்கம்

### ஆனந்தமானந்தமானந்தமே என்ற மெட்டு.

பல்லவி

வள் — ஆதரி யாதரி யாதரியே என்னை
யாதரி யாதரி யாதரியே

அநுபல்லவி

யானைவருகுதென்செய்வேன் கானகத்திலெங்குய்வேன் (ஆ)

பல்லவி

முரு — வஞ்சகி வஞ்சகி வஞ்சகியே பொல்லா
வஞ்சகி வஞ்சகி வஞ்சகியே

அநுபல்லவி

வந்துயென்னையானைமுன்பு தந்திடவேதுணிந்தாய்தென்பு (ஆ)

சரணம்

வள் — ஏதுசெய்வேனினியிப்போது நானே
யிங்குன்னைவேண்டினேனெந்தன்சீ மானே
பாதுகார்க்கவேணுமணந்துகொள் வேனே
பக்ஷமாயுன்னையென்றும்பிரி யேனே (ஆ)

சரணம்

முரு — தஞ்சமென்றுவருகின்றாயிப் போது
சம்மதியேனடியறிவேனுன் சூது

வஞ்சகமிப்படியுனக்கா காது
வள்ளியேயுந்தனைநம்பலா. காது (ஆ)

முரு— வச—அடிவள்ளி உன்னைப்போல சமத்தி யிந்தவுலகத்திலே கிடையாது இப்போது தான் கண்டேன் காட்டானையிடம் என்னை பிடித்துக் கொடுக்க எத்தனஞ் செய்தாயே ஐயோ யானை வந்திடுமோ

வள்— வச—பண்டாரப்பெரியவரே யானை வருகுதே யென்ன செய்வேன் மாதுகார்க்கவேணும் உம்மை மணந்து கொள்ளுகிறேன்.

முரு—வச—அடிவள்ளிஉன்னைநம்பமாட்டேன், சத்தியஞ்சொன்னால் நம்பிக்கொள்வேன்.

## பாட்டல்

## ஷெமெட்டு

பல்லவி

வள் — சத்தியம் சத்தியம் சத்தியமே இது
சத்தியம் சத்தியம் சத்தியமே

அநுபல்லவி

தஞ்சமென்றேனினிநானே கொஞ்சமும்பிசகிடேனே (ச)

சரணம்

இத்தரை தன்னிலே நீமணவாளன்
எப்போதும்பிரியே னீயோகண்ணாளன்
நத்தினேனிப்போது உரியதயாளன்
ராஜவடிவேல்பணியுங் குணாளன் (ச)

## கதாசாரம்

இவ்விதமாகச் சத்தியங் கூறவும் வள்ளியை முருகக்கடவுள் தழுவி ஆறுமுகம் பன்னிருகரத்துடன் பிரசன்னமாக வள்ளிநாயகி ஆனந்தபரவசமாகி முருகனைத் துதிக்கின்றாள்.

## வள்ளிநாயகி விருத்தம்

பன்னிரு கரனேவாவா பரமனின் குருவேவாவா
என்னையாள் பவனேவாவா விமையவர்க் கரசேவாவா
பொன்னெழி முருகாவாவா புனிதவே லவனேவாவா
நன்னிறை குகனேவாவா நாரணன் மருகாவாவா

கந்தவேள் முருகாவருக கருணைசேர் முருகாவருக
சுந்தர முருகாவருக தூயவேல் முருகாவருக
மந்திர முருகாவருக மயின்மிசை முருகாவருக
தந்திரமுருகா வருக சண்முகா வருக வருகவே

## விஷயம்

இவ்விதமாய் வள்ளிநாயகி துதிசெய்யவும் ஆனந்தமாய்த் தழுவியாட்கொண்டு இரவுபதினைந்து நாழிகைக்கு வந்து அழைத்துச் செல்லுகிறேனென்று அருள்செய்து மறைந்திடவும் மாளிகைசென்று இரவு பதினைந்து நாழிகையில் முருகனுடைய வரவை யெதிர் பார்க்கின்றாள்.

## வள்ளி புலம்பல்

பூமிமெச்சிடுமண்ணுமலே என்ற மெட்டு.

கண்ணிகள்

நாதன் முருகேசன் காதலன் சண்முகன்
வந்துமே யின்பும் தந்துமே யிங்குகந்துமே என்னை
ரக்ஷிக்கவேணுமே பக்ஷமாய்ப்போற்றினேன்
நாடினேன் அன்புகூடினேன்
பாதியிரவினில் நீதமாய்வருவேனென்
றின்பதாய் வெகு தென்பதாய் எந்தன் முன்பதாய் கூறி
பரிவுடன்சென்றுமே தருணம்வரவில்லை
பாரினில் எந்தனேரினில்
எந்தனையாட்கொள்ள கந்தனேவருவாய்

நேசமாய் பிரகாசமாய் மாவுல்லாசமாய் என்னை
யிப்போதுஆதரி யொப்பில்லாவேலவா
எற்றினேன் நின்னைப்போற்றினேன்
வந்தருள்நாயகா சந்திரசேகரன்
சேயனே கார்த்திகேயனே சம்ப்ரமதாயனே ராஜ
வடிவேல்துதித்திடக் கடிகியேகருணைசெய்
வாசமாய்இங்கு நேசமாய்

## கதாசாரம்

இவ்விதமாய் வள்ளிநாயகி புலம்பி முறையிடவும் முருக வேள் கருணைகூர்ந்து எழுந்தருளியாகினர்.

## பாட்டல்

சந்தனந்திமிர்ந்திலங்கும் என்ற மெட்டு.

கண்ணிகள்

இந்தவேளைதந்தேன் சேவை
சொந்தமுள்ள வள்ளிமாதே
எப்போதும்பிரிவதில்லை மயங்காதே
சிந்தையுமகிழ்ந் துகந்தேன்
உந்தனை நா னுதரிப்பேன்
செல்வியேகிருபை செய்தேன் துயர்போமே

## விஷயம்

இவ்விதமாயருள்செய்து வள்ளியை மயின்மீது எடுத்துக் கொண்டு செல்லும்போது வேடர்கள் தெரிந்து வந்து அமர்புரிய அவர்களை மயக்குறச்செய்ய வள்ளிநாயகிவேண்டி முறையிடவேடர் களை யெழுப்பித் திருத்தணிகாசலத்தில் மும்மூர்த்திகள் மகிழவும்

முப்பத்திமுக்கோடி தேவர்களும் புஷ்பமாரிபொழிய அந்தரதுந்துமி முழங்க நாரதர் கின்னரர் முனிவர்களும் அஷ்டதிக்குப்பாலர்களுந் துதிக்க வள்ளிநாயகியைத் திருமணஞ் செய்து வள்ளிதெய்வயானை சமேதராக முருகக்கடவுள் எழுந்தருளியாகினர்.

39

## மங்களம்

### நீநாமரூபமுள என்ற மெட்டு.

பல்லவி

சாமிமெஞ்ஞானகுரு சண்முகர்க்குமங்களம்

அநுபல்லவி

க்ஷேமமாய்வள்ளிமின்னாள் தெய்வயானைக்கிமங்களம் (சா)

சரணம்

திருமாலயன்சங்கரர்க்கும் தேவர்கட்குமங்களம்
அருமைலக்ஷ்மிபார்வதிக்கும் ஆதிசரஸ்வதிக்குமங்க்ளம் (சா)

அன்பதாயிக்கதையை யச்சிட்டோர்க்குமங்களம்
இன்பமாய்ராஜவடிவேலியற்றும் தமிழ்தனக்குமங்களம் (சா)

பார்ஸி

# ஆனந்தமோகன

# வள்ளியம்மன் சரித்திரம்.

சம்பூரணம்

சுபம்! சுபம்!! சுபம்!!!

முருகவேள் துணை

# அயக்காந்த திராவகம்

**அனுபவமானது! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!!**

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்டசகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப்புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேயமுறை படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்ப மாயிருக்கும் இருமல்நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட கொண்டால் இரண்டுவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள் இதனால் தீரக்கூடிய அநேக வியாதிகளில் முக்கியமான சிலவற்றைஇங் குறிக்கிறோம்.

நரைத்த மயிரைக் கருப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது புழுவெட்டி னாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர் வியாதிகள்தீரும், கண்ணெரி சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும் தே அசதியை யோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கு மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத்தரு தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுறப்பிக்கும் க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும் வாதபித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்த தாதுகளுக்கும் நல்லபலத்தைத்தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். இழந்து போன தேகதிடத்தைப் பழையபடி அடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

## இந்த திராவகத்தை உட்கொள்ள வேண்டிய முறை.

அரைக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் 5–துளி அல்லது 7–துளி திராவகத்தை அதில் விட்டுக் கலக்கிக் குடித்துவிட வேண்டும். பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அ[illegible]ம், 20-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை
[illegible]4—0    டஜன் 1-க்கு ரூபா–12

[illegible]மண்டலம் 40-[illegible]க்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2—0—0    டஜன் 1-க்கு ரூபா–21

[illegible]ந்து கிடைக்குமிடம்,

**பி. நா. சிதம்ப[illegible] முதலியார் பிரதர்ஸ்,**
[illegible]பூர், பாரக்ஸ் போஸ்டு,
மதராஸ்.